**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2013**

---

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முதலீட்டுப் பதிவேடு என்பவற்றை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1985 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க, எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நிதிய அதிகாரச் சட்டத்தின் 12(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிய செயற்பாட்டு நிருவாகம் தொடர்பான எனது அறிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளிலும் வருமான மற்றும் செலவினம் தொடர்பான கூற்று இங்கே இணைப்பு 01 ஆகவும் நிதியத்திற்குச் சொந்தமான நிதிமுதலீடுகள் தொடர்பான கூற்று இணைப்பு 2 ஆகவும் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 15,700,000 கிரயமுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீள மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சொத்தொன்று பாவனைக்கு உகந்த நிலைமை உருவாகிய சந்தர்ப்பத்திலிருந்து தேய்மானம் மேற்கொள்ளப்படுவது ஆரம்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் தேய்மானம் மேற்கொள்ளப்படாத கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது ஒவ்வொரு நடவடிக்கையின் பிரகாரமும் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சலானது இலகுவில் இனங்காணக்கூடிய விதத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

1987 ஆம் ஆண்டின்போது நிதியத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 150,000 பெறுமதியான மாணிக்கக் கற்கள் பதித்த கிரீட வடிவம் 1989 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டதாக எழுத்துமூலம் உறுதி செய்யப்பட்டபோதும், அதன் பௌதீக இருப்பினை நிதியம் உறுதி செய்யவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) என்பவற்றின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், தேசிய பாதுகாப்பு நிதியத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறானதொரு பதிவேடு தயாரிக்கப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட மிகை ரூபா 80,688,937 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 57,510,514 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளின் ரூபா 23,178,423 அதிகரிப்பிற்கு முதலீட்டு வட்டியின் 30 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 19,793,907 அதிகரிப்பும் நலன்புரிச் செலவனத்தில் ஏற்பட்ட 47 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 3,389,602 குறைவும் பிரதான காரணிகளாக அமைந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தமது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகையில் காயங்களுக்கு ஆளாகும் அல்லது மரணமடையும் பொலிஸ் அதிரடிப்படை அல்லது படையினரின் அல்லது அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நலனை வழங்குவது அடங்கலான தேசிய பாதுகாப்பை முன்னேற்றுவதற்கான மற்றும் அதனை உறுதிப்படுத்துதற்கு பெருமளவு காரணமாக அமைவதாக நிதியத்தின் ஆளுநர் சபை கருதும் விதத்தில் மற்றும் அவ்வாறான விடயங்களுக்கு நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை சனாதிபதியின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பயன்படுத்துதல் நிதியத்தின் ஆளுநர் சபையினது பணியாக அமைந்தபோதும், வருடாந்தம் ஈட்டப்படும் வருமானம் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படல் மிக நலிவுற்ற நிலையில் இருந்தது. கடந்த 5 ஆண்டுகளின்போது பெறப்பட்ட வருமானம் மற்றும் அதனோடொத்த நலன்புரிச் செலவினம் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றன.

| ஆண்டு | பெற்ற வருமானம் | நலன்புரிச் செலவினம் | பெற்ற வருமானத்தில் நலன்புரிச் செலவினத்திற்கான சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 2009 | 78,037,379 | 5,500,000 | 7.05 |
| 2010 | 75,509,010 | 40,108,739 | 53.12 |
| 2011 | 49,082,045 | - | 0 |
| 2012 | 64,988,177 | 7,238,435 | 11.14 |
| 2013 | 84,776,544 | 3,848,832 | 4.54 |

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

இராணுவம் பயன்படுத்துவதற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட நிதியத்திற்குச் சொந்தமான 3 வீடுகளுக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 721,500 கூட்டுத்தொகையான வீட்டு வாடகை 2014 ஜூலை 31 ஆந் திதகியளவிலும் அறவிடப்படாதிருந்தது. இவ்வீடுகளுக்கு அறவிடப்படும் வாடகையானது இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டது 2006 ஆம் ஆண்டிலேயாகும். தற்போது 8 ஆண்டுகள் முடிவுற்றிருந்தபோதும் அறவிடப்படும் வாடகையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகயை நிதியம் மேற்கொள்ளவில்லை.

## 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

நிதியமானது தனது வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றில் போதியளவு தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கு அதிகமான தொகையை நிரந்தமாகப் பயன்படுத்தாதிருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, நிதியத்திற்குச் சொந்தமான பணம் நலன்பெறக்கூடிய வழிகளில் நிரந்தர முதலீட்டுக்கு உட்படுத்தப்படுவது சம்பந்தமாக முறையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பொது நிதிப் பணிப்பாளரின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் குறைந்தது எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கேனும் அமைவாக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தேசிய பாதுகாப்பு நிதியத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அது தயாரிக்கப்படாதிருந்தது.

### 5.2 செயல் திட்டம்

2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் மீளாய்வாண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தது.

### 5.3 செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை 402 மற்றும் 402(1) என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் தேசிய பாதுகாப்பு நிதியத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாதிருந்தது.

### 5.4 பொருட்கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான பொருட்கொள்வனவுத் திட்டம் 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 5.5 ஆளுநர் சபைக் கூட்டங்கள்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் ஆளுநர் சபைக் கூட்டங்கள் நடைபெறவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதி முகாமைத்துவம்

**இணைப்பு 01**

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக்கூற்று

| **வருமானம்** | **2013** | **2012** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| நன்கொடை | 34,281 | 39,820 |
| முதலீட்டு வட்டி | 84,076,263 | 64,282,357 |
| வீட்டு வாடகை | 666,000 | 666,000 |
| | 84,776,544 | 64,988,177 |
| **செலவினம்** | | |
| பதவியணியினர் படி | 20,400 | 20,400 |
| நலன்புரிச் செலவினம் | 3,848,832 | 7,238,435 |
| கட்டிடத் தேய்மானம் | 174,875 | 184,078 |
| ரணவிறு நன்கொடை | 43,500 | 34,750 |
| | 4,087,607 | 7,477,663 |
| செலவினத்திலும் கூடிய வருமானம் | **80,688,937** | **57,510,514** |

**இணைப்பு 02**

**பணமுதலீடு தொடர்பான கூற்று**

| முதலீடு செய்யப்பட்ட நிறுவனம் | கணக்கு இலக்கம் | முதலீட்டுத் திகதி | கால எல்லை | 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| | | | ஆண்டு | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0001/21/20267 | 2013 ஆகஸ்ட் 28 | 01 | 118,569,341 |
| திறைசேரி உண்டியல் | LKB00515G159 | 2013 ஜூலை 19 | 01 | 75,014,360 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/78148 | 2013 செப்டம்பர் 21 | 01 | 98,027,365 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/75815 | 2013 ஜூன் 27 | 01 | 94,421,360 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/75807 | 2013 ஜூன் 27 | 01 | 88,566,222 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/75823 | 2013 ஜூன் 27 | 01 | 110,880,615 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/69297 | 2013 டிசெம்பர் 28 | 01 | 52,056,475 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/73189 | 2013 மார்ச் 24 | 01 | 66,182,776 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/75912 | 2013 ஜூன் 30 | 01 | 9,766,673 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/75939 | 2013 ஜூன் 30 | 01 | 12,566,717 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/76722 | 2013 ஜூலை 16 | 01 | 2,072,948 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/76749 | 2013 ஜூலை 16 | 01 | 2,072,948 |
| மக்கள் வங்கி | 2/0065/10/25058 | 2013 மார்ச் 31 | 01 | 400,000 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 0033-261-070152-4 | 2013 செப்டம்பர் 30 | 01 | 26,288 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 108250754499 | 2013 பெப்ரவரி 20 | 01 | 3,517,657 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 108250784606 | 2013 ஏப்ரல் 01 | 01 | 5,951,000 |
| தேசிய சேமிப்பு வங்கி | 2/0065/11/78202 | 2013 செப்டம்பர் 25 | 01 | 200,000 |
| | | | | 740,292,745 |